# கனடா-காரை கலாசார மன்றம்

## தமிழ் மொழித் திறன் போட்டி – 2023

### பேச்சு – கீழ்ப் பிரிவு (1ஆம் 2ஆம் வகுப்பு மாணவர்கள்)

## தமிழ் மொழியின் சிறப்பு

உலக மக்களால் பேசப்படும் மொழிகள் ஏராளம்! ஏராளம்!

அவற்றுள் ஒன்றாக விளங்குவது நமது தமிழ்மொழியாகும்.

இம்மொழி மிக மிகப் பழமையான மொழியாகும்.

இன்றும் சிறப்போடு கன்னித் தமிழாக விளங்குகிறது.

தமிழ் மொழி என்ற சொல்லுக்கு இளமை என்பது பொருளாகும்.

தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என முப்பிரிவுகளைக் கொண்டது.

பண்டைய மன்னர்கள் சங்கம் அமைத்து தமிழை வளர்த்தார்கள்.

இன்று எம் தாய்மொழி செம்மொழியாக உயர்வு பெற்றுள்ளது.

எங்கள் தமிழ் மொழி

எங்கள் தமிழ் மொழி

என்றென்றும் வாழியவே!

நன்றி. வணக்கம்.